## வெறுத்துப் போன வாழ்க்கையை மீட்டுக் கொடுத்த கனகாம்பரம்



முல்லை, மல்லிகை, சம்பங்கி போன்ற பூக்கள் மணத்தின் அடிப்படையில் பலரால் விரும்பப்படுபவை. அவற்றிற்கு நிகராக வாசனையே இல்லாத கனகாம்பரமும் பலரின் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் கண்ணைப் பறிக்கும் அதன் நிறம்தான். இதன் காரணமாகவே கனகாம்பரத்திற்கு சந்தையில் தொடர்ந்து நிலையான தேவை இருக்க மலர் சாகுபடி வரிசையில் தனக்கென ஒரு தனி இடத்தையும் அது தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.பூ சாகுபடி என்றாலே, ரசாயன முறையிலான விவசாயத்தை மட்டுமே மேற்கொள்ளும் விவசாயிகள் தான் அதிகம். அவர்களுக்கு மத்தியில் முழுக்க இயற்கை முறையில் கனகாம்பரத்தை சாகுபடி செய்ய ஆரம்பித்திருக்கின்றனர் கோயமுத்தூரிலிருந்து நேர்கிழக்காக 20 கி.மீ தூரத்திலிருக்கும் அரசூர் கிராமத்தைச் சேர்ந்த கோ. ராமசாமி – பூங்கோதை தம்பதியர்.

வெண்டை, வாழை, கீரைகள், தீவனப் பயிர்கள் என அனைத்தையும் இயற்கை முறையில் சாகுபடி செய்து வரும் அந்தத் தம்பதி, சமீபகாலமாகத்தான் கனகாம்பர பூவுக்கும் இயற்கை தோரணம் கட்ட ஆரம்பித்திருக்கிறது. பதினோரு மணிக்குள் பூவைப் பரித்து சந்தைக்கு கொண்டு செல்ல வேண்டும். நான் சுபாஷ் பாலேக்கருடைய 'ஜீரோ பட்ஜெட்' பயிற்சி, நம்மாழ்வருடைய 'இனியெல்லாம் இயற்கையே' களப் பயிற்சி இதில் எல்லாம் நாங்கள் கலந்து கொண்டோம். அதுபோக தொடர்ந்து பசுமை விகடனைப் படிக்கிறோம். இயற்கை வேளாண்மை செய்கிற அனுபவ விவசாயிகளிடம் அடிக்கடி ஆலோசனை கேட்கிறோம். அதனால்தான் வெற்றிகரமாக எங்களால் இயற்கை முறையில் விவசாயம் செய்ய முடிகிறது.

### கிலோ 80 ரூபாய்க்கு கீழே போனதில்லை!

எனக்கு போர்வெல்லோடு நாலரை ஏக்கர் நிலமிருக்கு. குளம், ஏரி என்று நிலத்தடி நீர் மட்டத்தை உயரச் செய்வதற்கு எந்த நீர் ஆதாரமும் எங்கள் ஊரில் கிடையாது. அதனால் நாங்களே உருவாக்கின பெரிய பாசன நீர்த் தேக்க வயலில் தண்ணீரைச் சேர்த்து வைத்து வெள்ளாமை செய்கிறோம். 60 சென்டில் கனகாம்பரம், 30 சென்டில் வெண்டை, 10 சென்டில் கீரை, அரை ஏக்கரில் வாழை, இது போக கொஞ்சம் தீவனப் பயிர் இருக்கிறது.ஆரம்பத்தில் தோட்டத்திற்குள் எட்டு இடத்தில் போர் போட்டு எதுலயுமே தண்ணீர் வராமல் விவசாயத்தையே விட்டுவிடலாம் என்று வெறுத்துப் போயிவிட்டது. அந்த சமயத்தில் கனகாம்பரம்தான் எங்களை கை தூக்கி விட்டது. அதனால் கனகாம்பரத்தை மட்டும் விடாமல் இருபது

வருடங்களாக பயிர் செய்துகொண்டிருக்கோம். எவ்வளவு வறட்சி வந்தாலும், அதை விடுவதில்லை. அதுமட்டுமல்லாமல் கனகாம்பரம் கிலோ 80 ரூபாய்க்குக் குறைந்து இதுவரை விற்றதே இல்லை என்பது ஒரு காரணம்.

**இயற்கை மேல முழுநம்பிக்கை இல்லை!**

தொழுவுரம், கோழி எரு இதையெல்லாம் அடிக்கடி நிலத்தில் கொட்டி வளப்படுத்தி வைத்திருக்கிறோம். அதில் எல்லாம் வண்டல் மண் கிடைக்கிற பொழுது எல்லாம் நிலத்தில் கொட்டி பரப்பி விட்டுவிடுவோம். அதனால் எங்கள் நிலத்தில் எதைப் போட்டாலும் நன்றாக வளரும்.வெண்டை உள்பட காய்கறிக்கு எல்லாம் முழுக்க இயற்கை விவசாயத்திற்கு மாறிவிட்டாலும் கோமூத்திரம், புகையிலைக் கரைசல் மாதிரியான இயற்கை விஷயங்களில் கனகாம்பரத்தில் பூச்சி விரட்டியாக பயன்படுத்துவதற்கு எங்களுக்கு ஆரம்பத்தில் கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது. என்னதான் இயற்கை என்று பேசினாலும் நடைமுறை என்று வருகிற பொழுது துணிச்சலாக அதை செயல்படுத்துவதற்கு தனி தைரியம் வேண்டும். ஏன்னென்றால் நாங்கள் சிறு விவசாயி. ஏதாவது பிரச்சனை என்றால் மொத்த முதலுக்குமே மோசம் வந்துவிடும். அதனால் கனகாம்பரத்திற்கு மட்டும் பூச்சிக்கொல்லியையும் இடைஇடையில் தெளித்தோம்.இந்த சமயத்தில் கோயம்புத்தூர், வேளாண் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் சம்பந்தமான ஒரு கூட்டம் நடந்நது. இரண்டு பேருமே அங்கே சென்றிருந்தோம். பூச்சியியல்துறை விஞ்ஞானி ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது அவரும் வேப்பங்கொட்டைக் கரைசலை சிபாரிசு செய்தார். இதைப் பற்றி பல்கலைக்கழக விஞ்ஞானியே இதை சொல்கிறார். அதற்குப் பிறகு தான் கனகாம்பரத்திற்கு இயற்கை முறை விவசாயத்தைக் கடைபிடிக்க ஆரம்பித்தோம்.

**60 சென்டில் கனகாம்பரம்!**

கனகாம்பரத்திற்கு வைகாசிப் பட்டம் உகந்தது. நாற்று நடவுதான் என்பதால் 60 நாட்களுக்கு முன்னரே நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும். முற்றிய காய்களை எடுத்து மூன்று நாட்கள் வெயிலில் காய வைக்கும்போது, வெடித்து விதைகள் வெளிவரும். இவற்றைப் புடைத்து சுத்தம் செய்து கொள்ள வேண்டும். 3 அடிக்கு 5 அடி அளவில் மேட்டுப்பாத்தி அமைத்து கல், மண் கட்டிகளை நீக்கி, இரண்டு கூடை தொழுவுரத்தைக் கொட்டி சமப்படுத்த வேண்டும். அதில் விதைகளைத் தூவி, கை விரல்களால் கீறிவிட்டு தண்ணீர் தெளிக்க வேண்டும். ஈரப்பதம் குறையாத அளவுக்கு தண்ணீர்விட வேண்டும். ஒருமுறை கைக்களை எடுக்க வேண்டியிருக்கும். 60 நாட்களில் நாற்று தயாராகிவிடும்.

**உரமே தேவையில்லை!**

60 சென்ட் நிலத்தில் 7 டிராக்டகர் தொழுவுரத்தைக் கொட்டி, இரண்டு உழவு ஓட்டி, இரண்டரை அடி இடைவெளியில் பார் அமைத்து, ஒரு அடி இடைவெளியில் கனகாம்பர நாற்றை ஈர நடவு செய்ய வேண்டும். நட்ட 20 – ம் நாள் முதல் களை எடுத்து அதிலிருந்து இருபது நாட்களுக்கு ஒரு முறை எ்று மொத்தம் நான்கு களையெடுக்க வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் விட்டால் போதுமானது. பாசன நீரிலேயே சாணம், கோமூத்திரம் ஆகியவற்றைக் கலந்து விடலாம். வேறு உரங்கள் எதுவும் தேவையில்லை.

**ஆறு மாதங்களுக்கு மகசூல்!**

30 மற்றும் 60 – ம் நாட்களில் இயற்கைப் பூச்சிவிரட்டியைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். நடவு செய்த 90 – ம் நாளில் பறிப்புக்கு வரும். 5 நாட்களுக்கு ஒரு பறிப்பு என ஆறு மாதங்களுக்கு தொடர்ந்து பறிக்கலாம். தை, மாசி, பங்குனி, மாதங்களில் அதிக மகசூல் கிடைக்கும். வெயில் ஏறுவதற்குள் பறித்து விட வேண்டும். 60 சென்ட்டில் மொத்தமாக 1,300 கிலோ வரை பூக்கள் கிடைக்கும்.

**30 சென்டில் வெண்டை!**

வெண்டைக்கு புரட்டாசி பட்டம் உகந்தது. 30 சென்ட் நிலத்தில் 4 டிராக்டர் தொழுவுரத்தைக் கொட்டி, இரண்டு உழவு ஓட்டி, இரண்டு அடியில் பார் முறை பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு அடி இடைவெளியில் வீரிய விதைகளை விதைத்து, நீர் பாய்ச்ச வேண்டும் (250 கிராம் தேவைப்படும்). ஒரு வாரத்தில் முளைவிடும். தொடர்ந்து வாரம் ஒரு முறை சாணம், கோமூத்திரம் கலந்த தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 15, 30 – ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். சாறு உறிஞ்சும் பூச்சி, காய்ப்புழு, தென்பட்டால், இயற்கைப் பூச்சி விரட்டி அடிக்கலாம். 45 – ம் நாளில் காய்க்கத் துவங்கும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்று மொத்தம் முப்பது முறை பறிக்கலாம். பறிப்புக்கு சராசரியாக 50 கிலோ வீதம், மொத்தம் 1,500 கிலோ மகசூல் எடுக்கலாம்.

**1 கிலோ 140 ரூபாய்:**

இப்பொழுது கனகாம்பரம் ஒரு கிலோ 140 ரூபாய் வரை விலை போகிறது. முகூர்த்த காலங்களில் 360 ரூபாய் வரைகூட விலைபோகும். வெண்டை சராசரியாக கிலோ 15 ரூபாய் வரை விலை போகும். இப்பொழுது 16 ரூபாய்க்கு போகிறது. பூ சாகுபடிக்கு கொஞ்சம் குளிர்ச்சியாக இருந்தால் நல்லாயிருக்கும். அதனால் பாத்திக்கு இடையில் ஊடுபயிராக அகத்தியை நட்டு வைத்தால் ஆடு, மாடுகளுக்குத் தீவனமும் கிடைக்கும்.
பொதுவாக ரசாயன முறையில் செய்யும்பொழுது கனகாம்பரத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய் வரைக்கும் பூச்சிக்கொல்லிக்கே செலவாகும். ஆனால் இயற்கைப் பூச்சிவிரட்டிற்கு மொத்தமாக 1,600 ரூபாய்தான் செலவாகும்.இதனால் 7,400 ரூபாய் மீதம்.

| 60 சென்டில் கனகாம்பரம் சாகுபடிக்கான செலவு – வரவு (உத்தேச கணக்கு) (ரூபாய் மதிப்பில்) | | |
|---|---|---|
| விவரம் | செலவு | வரவு |
| உழவு | 2,000 | |
| தொழுவுரம் | 4,400 | |
| விதை | 300 | |
| பார் அமைக்க | 650 | |
| நடவு | 400 | |
| பூச்சிவிரட்டி | 1,600 | |

| | | |
|---|---|---|
| நீர்பாய்ச்ச | 4,000 | |
| அறுவடை, போக்குவரத்து, கமிஷன் | 79,000 | |
| விற்பனை மூலம் வரவு (கிலோ 140 ரூ வீதம் 1,300 கிலோ) | | 1,82,000 |
| மொத்தம் | 92,350 | 1,82,000 |
| நிகர லாபம் | | 89,650 |

| **இயற்கைப் பூச்சிவிரட்டி தயாரிக்கும் முறை, தேவையானப் பொருட்கள்** | |
|---|---|
| கோமூத்திரம் | 20 லிட்டர் |
| தோல் நீக்காத காய்ந்த வேப்பங்கொட்டை | 10 கிலோ |
| பெருங்காயம் | 100 கிராம் |
| வாய்ப் புகையிலை | 1 கிலோ |
| ஊமத்தம் செடிகள் | மூன்று |
| பச்சைமிளகாய் | அரை கிலோ |

வேப்பங்கொட்டையை உரலில் போட்டு உலக்கையால் நன்றாக இடித்துக் கொள்ளவும். ஊமத்தம் செடி, புகையிலை, பச்சைமிளகாய் ஆகியவற்றை பொடியாக கிள்ளிக் கொள்ளவும். இவற்றை கோமூத்திரம் உள்ள ஒரு பிளாஸ்டிக் வாளியில் போட்டு, பெருங்காயத்தையும் போட்டு கலக்கி வேடு கட்டி நிழலில் வைத்து, தினமும் இருமுறை கலக்கி விடவும். 5 நாட்களில் பூச்சிவிரட்டி தயாராகி விடும். சுத்தமானத் துணியில் வடிகட்டி, பத்து லிட்டர் நீருக்கு 3 லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.அதுமட்டும் அல்ல வழக்கமாக ஆறு முதல் எட்டு மாதம் வரைக்கும் கனகாம்பர மகசூல் இருக்கும். இந்தத் தடவை அது 12 மாதத்திற்குக் கூட வரும் என்று தோன்றுகிறது. பயிர் இருக்கின்ற நிலையை வைத்தே அதைப் புரிந்துகொள்ள முடியும். சுபாஷ் பாலேக்கர் கூட கனகாம்பரத்தில் 18 மாதத்திற்குக் கூட மகசூல் எடுத்தவர்கள் இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்.

**தொடர்புக்கு:**

ராமசாமி,அரசூர் கிராமம்,கோயமுத்தூர்.

அலைபேசி: 93629 - 50286